# கிறிஸ்துவின் வசனம்

கொலோ 3:16

**(WORD OF CHRIST)**

ஆசிரியர்
சகோ. அர்ச்சுனன் II கொரி 3:6

நவம்பர்
1992

வாசகர்களுக்கு,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும், சமாதானமும் உண்டாவதாக!

இவ்விதழ் மூலம் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இந்த நான்காவது இதழை வெளியிடச்செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன் சென்றமாத வேத அறிவுப்போட்டியில் கலந்து கொண்ட ஒவ்வொருவருக்கும் விசேஷித்த வாழ்த்துக்களைக் கூறிக்கொள்கிறேன். மேலும் இவ்விதழை குறித்த கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வரவேற்கிறேன்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை நம் அனைவரோடும் கூட இருப்பதாக! ஆமென்.

ஆசிரியர்

# இச்சையடக்கம்

**(Self Control)**

பரிசுத்த வேதாகமத்தில் சாலமோன் ஞானி எல்லாக் காவலோடும் உன் இருதயத்தை காத்துக் கொள் அதினிடத்திலிருந்து ஜீவ ஊற்று புறப்படும் என்கிறார். நீதி 4:23.என் அன்பு சகோதரனே! சகோதரியே! உன் இருதயத்தை எப்படி காத்துக்கொண்டு வருகிறாய்? பிறனுக்குண்டான யாதொன்றையும் இச்சிக்கக்கூடாது என்னுடைய இருதயத்தில் அக்கிரமசிந்தை கொண்டிருந்தேனானால் ஆண்டவர் எனக்கு செவி கொடார் அண்டை வீட்டாரின் பொருட்கள் மீது ஆசை வைப்பது அதை அபகரித்துக்கொள்ள நினைப்பது, திருடுவது, இப்படிப்பட்ட பலசிந்தனையில் இருந்தோமானால் ஆண்டவர்நமக்கு நிச்சயம்செவி கொடார். பலவானை பார்க்கிலும் நீடிய சாந்தமுள்ளவன் உத்தமன் பட்டணத்தை பிடிக்கிறவனைப் பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன் அப்படியானால் நமக்கு எவ்வளவு சாந்தம் தேவைப்படுகிறது எவ்வளவு அடக்கும் சக்தி தேவைப்படுகிறது.

ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன் ஆசிரமம் வீட்டச் ஓட்டப்பந்தயத்தில் 10 பெண்கள் கலந்துகொண்டார்கள் அதில் ஜான்ஸி என்ற பெண் எப்போதும் முதல்பரிசைப் பெறுவாள். அவளை எப்படியாவது தோல்வியுற செய்ய வேண்டுமென்று நினைக்க ஜனங்கள் அவள் ஓடி வரும்போது தங்கமுலாம் பூசப்பட்ட மஞ்ச உருண்டை அவள்முன் உருட்டிவிட்டனர். அவளோ தங்கம்என நினைத்து அதை இச்சித்து ஓட்டத்தை நிறுத்தி அதை எடுக்க ஆரம்பித்தாள் இதனால் பந்தயப்பொருளை இழந்தாள். ஆம் பிரியமானவர்களே! பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும இச்சையடக்கமாயிருப்பார்கள் அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள். நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு 1கொரி 9.25 அப்படிச்செய்கிறோம்.

அப்போஸ்தலனாகிய பவுல் பேலிக்ஸிடமும் அவன் மனைவி துருசில்லாளிடமும் பேசும் போது அவன் நீதியையும் இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும் குறித்து பேசுகையில் பேலிக்ஸ் பயமடைந்து இப்பொழுது நீபோகலாம். எனக்குசமயமான போது உன்னை அழைப்பேன் என்றான் அப் 24:25 அநேகர் இப்ப-டித்தான் இச்சையடக்கத்தை குறித்து சொன்னால் என்னால் இப்படியிருக்கமுடியாது என்னால் இதைச் செய்யாமலிருக்க முடியாது என்று அதற்க்கு அடிமைப்பட்டு விடுகிறார்கள். என்அன்பு சகோதர-னே! சகோதரியே! கரண்ட் ஷாக்அடிக்கும் என்றுநமக்கு தெரிகிறது நாம்யாவரும் தெரிந்திருந்தும் கரண்ட்சப்பளையில் கைவைப்பதில்லை ஏன் தொட்டால் மரித்து விடுவோம் என்றபயம். ஆனால் ஆண்டவர் பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக!, பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும். அவனுடைய கழுதையையும் பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக! யாத் 20:17 ல் கட்டளையாகக் கொடுத்திருந்தும் இதை கைக்கொள்வதில்லை. பிரிய நண்பரே! இப்படிப்பட்ட இச்சையானது கர்ப்பம் தரித்து பாவத்தை பிறப்பிக்கும் பாவம் பூரணமாகும்போது மரணத்தைப் பிறப்பிக்கும் யாக் 1:15 ஆகையால் நம்முடைய வாழ்க்கையில் ஞானத்தோடே இச்சையடக்கத்தையும் இச்சையடக்கத்தோடே பொறுமையையும் 11 பேதுரு 1:6 ன் படி கூட்ட வேண்டும். மோசம் போகாதிருங்கள் யாக் 1.16 கர்த்தர் உங்களை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பாராக!. ஆமென்!

★ **சபைச் செய்திகள்:**

சென்றமாதம் 17ம் தேதி சகோதரிகளுக்கான கூட்டம் மிக சிறப்பாக நடைபெற்றது. இக்கூட்டங்களில் 10 சகோதரிகள் கலந்து கொண்டு பயன் பெற்றார்கள் கூட்டத்தை சகோதரி **ஞானோரி அர்ச்சுனன்** பொறுப்பேற்று நடத்தினார்.

அதேமாதம் 31ம் தேதி சுவிசேஷக் கூட்டம் மார்னிங்ஸ்டா ஆங்கிலப்பள்ளியில் நடைபெற்றது. குறைந்தபட்சம் 40 பேர் கலந்து கொண்டு பயன் பெற்றார்கள். அண்டையிலுள்ள புறஜாதிகளுக்கு ஒலிபெருக்கிமூலம் நற்செய்தி சென்றடைந்திருக்குமென்று நம்புகிறோம் இக்கூட்டத்தில் சகோ. **பால்ராஜ்** திருச்சி அவர்கள் நற்செய்தி கொடுத்தார்கள்.

★ **பரிசு**

சென்ற இதழின் வேத அறிவுப்போட்டியில் பரிசு பெற்றவர்கள்

1. Sis **ஜெய அமுதா** வதிலை
2. „ **பாலகீதா** பட்டிவீரன்பட்டி
3. சகோ எட்வர்டு **பிச்சைமுத்து** கடாநகரம்.
4. சகோ **தயாளன்** வதிலை
5. „ **காஸ்பல்** „

★ **சென்ற இதழின் வேத அறிவுப்போட்டியின் விடைகள்:**

1. பாபேல் ஆதி 11:9
2. துக்கிப்பு பிர 7:3
3. வாதைகளை கூட்டுவார் அவனுடைய பங்கை எடுத்து போடுவார் வெளி 22:18,19,
4. பேசக் கூடாது 1 கொ 14:34
5. சபைக்கு எபே 5:23
6. சங்கீதம் 119ம் அதிகாரம்
7. 31,123. King James Version
8. 5.000 புருஷர்கள்
9. சாத்ராக்,மேஷாக், ஆபேத்,நேகோ
10. தாவீது.

★ **இம்மாத வேத அறிவுப்போட்டி:**

1. நோவாவின் காலத்தில் மூடப்பட்ட மலைகளுக்மேல் எத்தனை முழு உயரத்திற்க்கு ஜலம் பெருகிற்று?
2. இஸ்ரவேல் புத்திரர்கள் சமுத்திரத்தை கடக்கும்போது ஜலம் எப்படி நின்றது?
3. தாவீதை ஏன் தேவன் தன்நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டாம் என்றார்?

4. மனுஷன் தனக்கு தேவர்களை உண்டு பண்ணலாமோ?
5. இரட்சிக்கப்பட்டவர்களை யார் சபையில் சேர்த்துக் கொண்டு வந்தது?
6. மூன்றாம் மெத்தையிலிருந்து கீழே விழுந்து மரித்தவனாய் எடுக்கப்பட்டவன் யார்?
7. முதல் முதல் எங்கு சீஷர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்கிற பெயர் வழங்கிற்று?
8. நம்முடைய குடியிருப்பு எங்கேயிருக்கிறது?
9. ஆவியின் கனிகள் எத்தனை?
10. வேதவாக்கியங்களெல்லாம் எதனால் அருளப்பட்டிருக்கிறது?

முதல் ஐந்திற்கு வேத ஆதாரத்துடனும், கடை ஐந்திற்கு விடை மட்டும் கீழ்க்காணும் முகவரிக்கு ஒரு போஸ்ட் கார்டில் எழுதி இம்மாத இறுதிக்குள் எமக்கு வந்து சேரும்படி அனுப்பவும் சரியான விடை எழுதுபவருக்கு பரிசு அனுப்பப்படும்.

★ சிந்தனைக்கு

| | |
|---|---|
| 8 | 8 |
| 109 | 109 |
| 222 | 222 |
| 34 | 34 |
| 445 | 373 |

இந்த இரு கணக்குகளில் எது சரியான விடை தருகிறது? நீங்களே கண்டுபிடியுங்கள் இலக்கம் தவரும்போது கணக்கும் தவறாக வருகிறது. அதேபோல் சத்தியத்தைவிட்டு தவரும்போது நீங்களும் தவறிவிடுவீர்கள் சிந்தியுங்கள்! செயல்படுங்கள்!!

If undelivered Please return to:
**THE EDITOR**
**Word of Christ, Post Box No:5**
BATLAGUNDU. Anna Dt.

**For Private Circulation onliy**

Published by Batlagundu church of Christ and
Printed at Shanthi Press Batlagundu-624202.